பக்கங்கள் 21+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | சித்திரை 30 செவ்வாய்க்கிழமை 13.05.2025 | அதிர்வு 283

## கல்கிசை இளைஞர் சுட்டுப் படுகொலை: நேற்று இருவர் கைது!

கொழும்பு – கல்கிசைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சில்வெஸ்டர் வீதிக்கு அருகில் கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் 03

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# அநுர, கஜேந்திரகுமாரின் கட்சிகளுக்கு ஈ.பி.டி.பி. ஒருபோதும் ஆதரவு வழங்காது!

### யாழில் செய்தியாளர் சந்திப்பில் ஸ்ரீகாந் திட்டவட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் மக்களின் அடையாளங்களை அழிக்க முயலும் தேசிய மக்கள் சக்திக்கோ, சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தம் இல்லாமல் நடைமுறைச் சாத்தியமற்ற வெறும் வீராப்பு அரசியலை முன்னெடுத்து வரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கோ ஆதரவு இல்லை என்று தெரிவித்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந் பன்னீர்செல்வம், காத்திரமான எதிர்த்தரப்பாக உள்ளூராட்சி சபைகளை எதிர்கொள்ளவே கட்சி தீர்மானித்து இருக்கின்றது என்றும் குறிப்பிட்டார். 02




# வாவியில் மூழ்கி இரு சிறுமிகள் பரிதாப மரணம்!

விடுமுறைக்காக உறவினரின் வீடொன்றுக்குச் சென்ற 17, 12 வயது சிறுமிகள் இருவர் வாவியில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இன்று பகல் குருநாகல் மாவட்டம், கல்கமுவ பகுதியில் உள்ள பாமுகடவல வாவியில் நீராடிக்கொண்டிருந்த வேளையிலேயே இருவரும் நீரில் மூழ்கி மூச்சுத்திணறி சாவடைந்துள்ளனர்.

கம்பஹா மற்றும் இரத்தினபுரி பகுதிகளைச் சேர்ந்த சிறுமிகளே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இறந்தவர்களின் சடலங்கள் கல்கமுவ வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.



# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**அநுர, கஜேந்திரகுமாரின்...**

யாழ். ஊடக மையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியாகிய எமக்கு வாக்களித்த அனைவருக்கும் முதலில் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்தத் தேர்தல் முடிவுகள் எம்மைப் பொறுத்த வரையில் ஏமாற்றங்களையோ, ஆச்சரியங்களையோ ஏற்படுத்தவில்லை.

காரணம், வித்தியாசமான அரசியல் சூழலிலேயே நாங்கள் இந்தத் தேர்தலை எதிர்கொண்டிருந்தோம். எந்தவிதமான அரசியல் அதிகாரங்களும் அற்ற நிலையில், எம் மீதான ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களும், எமது செயலாளர் நாயகம் கைது செய்யப்படப் போகின்றார் என்ற ஆதாரமற்ற வதந்திகளும் ஒரு புறம் பரப்பப்பட்டுக் கொண்டிருக்க, மறுபுறத்தில் வழமை போன்று எமக்கு எதிரான சேறடிப்புக்களும் முன்னெடுக்கப்பட்ட நிலையிலேயே இந்தத் தேர்தலை எதிர்கொண்டிருந்தோம். இந்நிலையில் எமக்கு 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் கிடைத்திருக்கின்றன. இது எமது மக்கள் எமது வேலைத்திட்டங்களையும் எமது நடைமுறைச் சாத்தியமான அரசியல் அணுகுமுறைகளையும் ஆதரிக்கின்றார்கள் என்ற செய்தியையே வெளிப்படுத்தி இருக்கின்றது. அந்த வகையில், இந்தத் தேர்தல் முடிவைப் பின்னடைவிலும் ஒரு வெற்றியாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

இந்நிலையிலே உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பில் எமது நிலைப்பாடு பற்றிய கேள்வி பல்வேறு தளங்களில் தற்போது பேசுபொருளாகக் காணப்படுகின்றது.

எம்மைப் பொறுத்த வரையில், தேசிய மக்கள் சக்தியும், அதேபோன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தவிர்ந்த தரப்புக்கள் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைக்க எமது ஒத்துழைப்பு அவசியம் எனக் கருதி எம்மை அணுகும் பட்சத்தில் அவை தொடர்பாக சாதகமாக பரிசீலிக்கத் தயாராக இருக்கின்றோம். அவ்வாறான தேவை ஏற்படாத பட்சத்தில், ஆரோக்கியமான எதிர்த்தரப்பாக உள்ளூராட்சி சபைகளில் தனித்துவமாக மக்கள் நலன் சார்ந்து செயற்படுவதற்கு ஆர்வமாக இருக்கின்றோம்.

தேசிய மக்கள் சக்தி என்று சொல்லிக் கொள்ளுகின்ற ஜே.வி.பி. கட்சியினருக்கு ஆதரவு தெரிவிக்க மறுப்பதற்கு இனவாதமோ, இன ரீதியான சிந்தனைகளோ காரணம் இல்லை என்பதை முதலில் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

எம்மைப் பொறுத்தவரையில், எமது மக்களுடைய அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கும், எமது மக்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் தேசிய நல்லிணக்கம் அத்தியவசியமானது என்பதை உறுதியாக நம்புகின்றோம்.

அதற்காக கடந்த 35 வருடங்களாகத் தொடர்ச்சியாக உழைத்தும் வருகின்றோம். கடந்த காலங்களில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த தென்னிலங்கை அரசுகள், எமது தேசிய நல்லிணக்க அணுகுமுறையின் அவசியத்தைப் புரிந்துகொண்டு சாதகமான தமது பிரதிபலிப்புக்களை வெளிப்படுத்தி வந்தன. ஆனால், தற்போதைய அரசிடம் தேசிய நல்லிணக்கத்தின் அவசியம் பற்றிய புரிதல் கொஞ்சமும் இல்லை என்பதை அவர்களுடைய செயற்பாடுகள் வெளிப்படுத்துகின்றன.

அதுமாத்திரமன்றி, அனைவரும் இலங்கையர், எல்லோருக்கும் சமத்துவம் போன்ற வார்த்தைகள் மூலம், எமது தனித்துவங்களையும் அடையாளங்களையும் நீர்த்துப் போகச் செய்து, வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம், தமிழர்கள் தேசிய இனம் போன்றவற்றுக்கான அடிப்படைகளை இல்லாமல் செய்வதற்கான ஆழமான நிகழ்ச்சி நிரலோடு செயற்படுகின்றார்கள் என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்துகின்றது. இந்நிலையிலேயே ஜே.வி.பி.யினருக்கு ஆதரவளிப்பதில்லை என்று தீர்மானித்துள்ளோம்.

அதேபோன்று, வெளிப்படைத் தன்மையோடு நடைமுறைச் சாத்தியமான அரசியலை முன்னெடுக்கின்ற தனித்துவமான அரசியல் தரப்பான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியாகிய நாம், சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தம் இல்லாமல், நடைமுறைச் சாத்தியமற்ற வெறும் வீராப்பு அரசியலை முன்னெடுத்து வருகின்ற தமிழ்த் தேசிய முன்னணியினருக்கு ஆதரவளிப்பதும் நடைமுறையில் சாத்தியமற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரைப் பொறுத்த வரையில் இப்போது கூட கொள்கை ரீதியான உடன்பாடு, கொள்கை ரீதியான கூட்டிணைவு என்று திரும்பத் திரும்பச் சொல்லி வருகின்றார்கள். அவர்களுடைய கொள்கை என்ன என்பது அவர்களுக்கே விளங்கவில்லை என்பதையே அவர்களின் செயற்பாடுகள் வெளிப்படுத்துகின்றன.

உதாரணமாக தூய நகரம், தூய்மையான நிர்வாகம் என்கிறார்கள். கடந்த மாகாண சபையிலே ஊழல், மோசடியில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டவர்களையும், கடந்த காலங்களில் நிதி நிறுவனம் நடத்தி எமது மக்களின் பணத்தைக் கொள்ளையிட்டவர்கள் என்ற வலுவான குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டவர்களையும் இணைத்து வைத்துக்கொண்டு தூய்மையான நிர்வாகம் பற்றி அவர்கள் பேசுகிறார்கள்.

ஒற்றையாட்சியையும் எக்கிய இராச்சியத்தையும் நிராகரிக்கின்றோம் என்று கற்பூரம் கொளுத்தி சத்தியம் செய்யாத கட்சிகளோடு ஒட்டவும் மாட்டோம் உறவாடவும் மாட்டோம் என்கின்றார்கள். எக்கிய இராச்சியம் என்ற சொல்லாடல் பயன்படுத்தப்பட்ட புதிய அரசமைப்பை உருவாக்க ஆதரவு கொடுத்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனை அரவணைத்து உறவாடிக் கொண்டு, குறித்த அரசமைப்பு உருவாக்கத்துக்குப் பங்களிப்பு செய்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனுடனும் செல்வம் அடைக்கலநாதனுடனும் டீல் பேசுகின்றனர்.

இன்னொமொரு வேடிக்கை என்னவென்றால், ஈ.பி.டி.பி. தமிழ்த் தேசிய பரப்பில் செயற்படாத கட்சியாம். எங்களோடு பேசுவது தங்களுடைய கொள்கைக்கு மாறான செயற்பாடாம்.

ஆனால்,ஈ.பி.ஆர்.எல்.எப்., புளொட், ரெலோ, சமத்துவக் கட்சி உள்ளங்கிய ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியோடு பேசுவார்களாம். அவர்கள் தமிழ்த் தேசியப் பரப்பிலே செயற்படுகிறார்களாம்

தமிழ்த் தேசியத்துக்குப் புறம்பான தரப்பாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியை அடையாளப்படுத்துகின்றவர்கள், 2015 ஆம் ஆண்டு வரையில் எமது கட்சியை வழிநடத்திய தலைவர்களுள் ஒருவரான தோழர் அசோக் என்று அறியப்பட்ட சந்திரகுமாருடன் இணைந்து உள்ளூராட்சி சபைகளை அமைக்க டீல் பேசுகின்றனர்.

மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகளோடு இணக்க அரசியலில் ஈடுபட்டமையினால் ஈ.பி.டி.பி. ஒட்டுக்குழுவாம். தென்னிலங்கை அரசோடு இணக்க அரசியல் செய்கின்ற கட்சி ஒட்டுக் குழு என்றால், டி.எஸ். சேனநாயக்க காலத்திலேயே இணக்க அரசியல் செய்த உங்கள் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்தானே மிகவும் மூத்த ஒட்டுக்குழு.

இவ்வாறு தங்களுடைய செயலுக்கும் சொல்லுக்கும் சம்பந்தமில்லாமல் செயற்பட்டுக் கொண்டு, மக்களின் பிரச்சினைகளைத் தீராப் பிரச்சினைகளாக வைத்திருந்து சுயலாப அரசியல் செய்கின்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கு ஆதரவளிப்பதும் சாத்திய மற்றது என்ற அடிப்படையிலேயே எமது தீர்மானம் அமைந்திருக்கின்றது." - என்றார்.

# உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் ஜூன் 2ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகிறது!



( வி.ரி.சகாதேவராஜா)

பொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு பிரசுரித்த விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றங்களின் நான்கு ஆண்டுகால பதவிக்காலம் 2025.06.02 ஆம் திகதி முதல் ஆரம்பமாகிறது.

அதற்கமைய உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளின் முதல் கூட்டம் ஜூன் 2 ஆம் திகதி கூட வேண்டும்.

339 உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளுக்கான வாக்கெடுப்பு கடந்த 06 ஆம் திகதி நடைபெற்றது.

இந்தத் தேர்தலில் ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தி 265 அதிகார சபைகளையும், இலங்கை தமிழ் அரசுக் கட்சி 35 அதிகார சபைகளையும், ஐக்கிய மக்கள் சக்தி 14 அதிகார சபைகளையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 6 அதிகார சபைகளையும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் முறையே 3 அதிகார சபைகளையும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 2 அதிகார சபைகளையும், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி மற்றும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி தலா ஒரு அதிகார சபையையும் பெற்றுக் கொண்டன. 4 சுயேட்சைக் குழுக்கள் தலா ஒரு அதிகார சபைகளைக் கைப் பற்றிக்கொண்டன.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட 49 அரசியல் கட்சிகள் மற்றும் 257 சுயேச்சைக் குழுக்கள் சார்பில் 75,589 பேர் போட்டியிட்டனர்.

2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் முடிவடைந்து 21 நாள்களுக்குள் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் தேர்தல் பிரச்சாரம் தொடர்பான செலவு விவரத் திரட்டை உறுதிப்படுத்தப்பட்ட வகையில் சமர்ப்பிக்க வேண்டும் என்று அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**கல்கிஸை...**

தொடர்பில் இரண்டு சந்தேகநபர்கள் கல்கிஸை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் கல்கிஸை மற்றும் தெஹிவளை ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் 21 மற்றும் 32 வயதுடையவர் ஆவார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கல்கிஸை, சில்வெஸ்டர் வீதிக்கு அருகில் கடந்த 5 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவர் வீடொன்றுக்கு முன்னால் இருந்த இளைஞர் ஒருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்த முயன்றனர்.

இதன்போது அந்த இளைஞன் அங்கிருந்து தப்பிச் சென்று நீண்ட தூரம் ஓடினார்.

ஆனால், துப்பாக்கிதாரிகள் இளைஞரைத் துரத்திச் சென்று நடுவீதியில் வைத்து சுட்டுக் கொலை செய்தனர்.

தெஹிவளை, ஓபன் பிளேஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞரே இவ்வாறு கொலை செய்யப்பட்டார்.



இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு உதவி செய்தார் எனக் கூறப்படும் இரண்டு சந்தேகநபர்கள் கல்கிஸை பிரதேசத்தில் வைத்து நேற்று திங்கட்கிழமை மாலை கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிஸை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.




# வவுனியாவில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

(கி.வசந்தன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வவுனியா கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு வவுனியா பிரதான தபால் நிலையத்துக்கு முன்பாக இன்று இடம்பெற்றது.

தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை பரிமாறி தமிழ் மக்கள் இனவழிப்புக்கு உள்ளான வரலாற்றையும், வலிகளையும் இளைய தலைமுறையினருக்குக் கடத்தும் செயற்பாட்டினை யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் முன்னெடுத்துள்ளனர்.

அந்தவகையில் இன்று வவுனியா பிரதான தபால் நிலையத்துக்கு முன்பாக வீதியால் சென்ற தமிழ், சிங்கள மக்களுக்கு முள்ளிவாய்கால் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது.

அத்துடன், வலிந்து காணமால் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் வவுனியா – இலுப்பையடி பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வுகளில், பொதுமக்கள் பலர் உணர்வுபூர்வமாக வருகை தந்து கஞ்சி அருந்திச் சென்றமை குறிப்பிடத்தக்கது.















# கிளிநொச்சியிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இரண்டாவது நாள் இன்று பல பகுதிகளில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் கிளிநொச்சி பஸ் தரிப்பு நிலையத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.







### யாழ். நல்லூரில் திலீபனின் நினைவாலயத்துக்கு முன்னால்

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் அமைப்பின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கிவைப்பு

யாழ். நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்துக்கு முன்னால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் அமைப்பின் ஏற்பாட்டில் இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் இன்று முன்னெடுக்கப்பட்டது.

இதில் குரல் அற்றவர்களின் குரல் அமைப்பினர், பொது அமைப்பினர் இணைந்திருந்தனர்.

வீதியால் சென்ற மக்கள் உணர்வு பூர்வமாக முள்ளிவாய்க்கால் கஞ்சியை வாங்கி அருந்திச் சென்றனர்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## நிர்வாகச் சீர்கேடு!

லஞ்சம், ஊழல், மோசடி, துஷ்பிரயோகம் போன்ற சீர்கேடுகளை ஒழிப்போம் என்று கூறித்தான் தேசிய மக்கள் சக்தி ஆட்சி பீடத்திற்கு வந்தது. ஆனால் முன்னைய ஆட்சிக் காலத்தில் இடம் பெற்ற ஊழல், மோசடிகள் குறித்து கனகாத்திரமான நடவடிக்கை எதனையும் இந்த அரசு எடுத்ததாகத் தெரியவில்லை.

புதிய அரசின் கீழ் ஊழல், மோசடிகள் இடம்பெறுகின்றன என்ற பெரிய குற்றச்சாட்டுகள் இதுவரை கிளம்பாமல் இருந்தாலும், நிர்வாகச் சீர்கேடுகள், தவறான முகாமத்துவம் ஆகியவை பற்றி பல்வேறு குறைபாடுகள் தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வருகின்றன. நிர்வாகச் சீர்கேடுகளும், தவறான முகாமைத்துவமும் கூட ஒருவகையில் ஊழல், மோசடிகள் வகையறாக்களுக்குள் அடங்குவனதான். அவற்றைக் கட்டுப்படுத்த முடியாமல் இந்த அரசு தடுமாறுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் மின்சார கட்டணம் 25 வீதம் முதல் முப்பது வீதம் வரை அதிகரிக்கலாம் என்ற எதிர்வு கூறல்கள் வெளிப்பட்டு வருகையில், செலவு குறைந்த நீர் மின் உற்பத்தி திட்டங்களைச் சரியான முறையில் நிர்வகிக்காத காரணத்தினால், செலவு கூடிய எரிபொருள் மூலமான மின் உற்பத்தி நடவடிக்கைகளில் அதிகம் தங்கி இருக்க வேண்டிய மோசமான நிலை ஏற்பட்டிருப்பதாக சக்தி வலு நிபுணர் கலாநிதி விதுர ரலபனாவே கூறுகிறார்.

மகாவலி மற்றும் லக்ஸபானா நீர் மின் வளாகங்களின் பயன்பாட்டில் பெரும் தவறு இழைக்கப்பட்டிருப்பதாக அவர் சுட்டிக் காட்டுகிறார்.

இந்த மாத நடுப் பகுதியில் நீர் மின் உற்பத்தி நிலையங்களில் நீர் சேமிப்பு சராசரியாக 60 வீதம் இருக்கிறது. இது உண்மையில், தென்மேற்கு பருவ மழைக்கு சற்று முன் இருக்க வேண்டிய நல்ல நிலையாகும். ஆனால் இந்த நிலைமையைச் சரியாக பயன்படுத்தக் கூடிய வகையில் விடயம் முகாமைத்துவம் செய்யப்படவில்லை என்று அவர் சுட்டிக் காட்டுகின்றார். நீர்த்தேக்கங்களில் நீரின் கையிருப்பு பெரிய ஏற்றத்தாழ்வோடு காணப்படுகின்றது. மகாவலி நீர்த்தேக்கங்களில் நீர் சேமிப்பு 75 வீதத்துக்கும் அதிகமாக உள்ளது. அதே நேரத்தில் லக்ஸபானாவில் நீர்க் கையிருப்பு 30 வீதத்துக்கு குறைந்து நலிவடைந்துவிட்டது. இத்தகைய ஏற்றத்தாழ்வு காரணமாக லக்ஸபானா வளாகத்தில் உள்ள மவுசாகலை நீர்த்தேக்கத்தால் உற்பத்தி செய்யப்படும் நீர் மின்சாரம் கிட்டத்தட்ட முப்பது வீதம் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் செலவு அதிகமான எரிபொருள் மின்னுற்பத்தியில் அதிகம் தங்கி இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று அவர் விளக்குகின்றார்.

லக்ஸபானா நீர்த்தேக்கம் மின்னுற்பத்தி நிலையம் மாத்திரமல்ல. அது கொழும்பு உட்பட முக்கிய பிரதேசங்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கும் ஒரு பிரதான மையமும் கூட. அதன்படி லக்ஸபானாவில் இருந்து எந்த நேரமும் மின் உற்பத்தியும் நீர்ப் பயன்பாடும் மேற்கொள்ளப்பட வேண்டும். அந்த நிலையில் மகாவலி நீர்த்தேக்கங்கள் நிரம்பி இருக்கும் போது லக்ஸபானா இவ்வளவு குறைந்த அளவை அடைய எப்படி அனுமதித்தார்கள் என்று அவர் கேள்வி எழுப்புகிறார்.

நீர்த்தேக்கங்கள் மூலம் மின்னு உற்பத்தி செய்வதில் முகாமைத்துவத் தவறு ஏற்பட்டிருப்பதாக அவர் சொல்லுவது முக்கியமான விடயம்.

அதுபோலவே தனியார் தரப்பிடமிருந்து சூரிய மின் உற்பத்தி மூலம் பெறப்படும் மின்சாரத்தை பெற்றுக் கொள்ளவும், அதை உள்வாங்கி இணைப்பில் சேர்த்துக் கொள்ளவும், சரியான திட்டமிடலும் முறைகளும் செயற்பாடும் இல்லாத காரணத்தினால், அந்த மின்னைக் கொள்வனவு செய்வதிலும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இதன் காரணமாக எரிபொருள் மூலமான மின்உற்பத்திக்கு அதிக செலவினமும், அந்த உற்பத்தியை செய்யும் தரப்புகளுக்கு அதிக லாபமும் தேடிக் கொடுக்கும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

இந்த விடயம் ஊழல், மோசடி, முறைகேடு வகையறாக்குள் ஒன்றாக சேர்த்து விசாரிக்கப்பட வேண்டிய விவகாரமாகும்.



# உப்புக்குப் பெரும் தட்டுப்பாடு; இலங்கையின் அவல நிலை!

இலங்கை சந்தையில் உப்புக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது என்று உப்பு உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

உப்பு இறக்குமதி தாமதமான தன் காரணமாக சந்தையில் உப்பு தட்டுப்பாடு நிலவுவதாக உப்பு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் கனக அமரசிங்க தெரிவித்துள்ளார்.

30 மெட்ரிக் தொன் உப்பை இறக்குமதி செய்ய அரசு தீர்மானித்திருந்த போதும் அது தாமதமாகியுள்ளது என்று சங்கத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் வாரத்தில் குறித்த உப்புத் தொகை கிடைத்த பின்னர் உப்பு தட்டுப்பாடு கட்டுப்படுத்தப்படும் என்று உப்பு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சந்தையில் உப்பு ஒரு கிலோ 450 ரூபா முதல் 500 ரூபா வரையில் விற்பனை செய்ய வர்த்தகர்கள் முயற்சிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உப்பு விலை தொடர்பாக நுகர்வோர்விவகாரஅதிகாரசபைக்கும்முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் நுகர்வோர் விவகாரங்கள் மற்றும் தகவல் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்துள்ளார்.

அதற்கேற்ப தேவையான நடவடிக்கைகளை எடுக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், உப்பு விநியோகம் குறித்து வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ந.திருலிங்கநாதன் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில்,

உப்பின் விலை கட்டுப்பாடற்ற ரீதியில் அதிகரித்துள்ள நிலையில், அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமானது மன்னாரில் உப்பைக் கொள்வனவு செய்து யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விநியோகித்துள்ளது.

179 ரூபாவுக்கு ஒரு பக்கெட் உப்பை பொது மக்கள் கொள்வனவு செய்ய முடியும். பொதுமகன் ஒருவர் ஆகக் கூடியது 3 உப்பு பக்கெட்களையே கொள்வனவு செய்ய முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 6 வயதுப் பிள்ளையின் உணவில் நஞ்சு கலந்த தந்தை தலைமறைவு!

## கைது செய்ய இளவாலைப் பொலிஸார் நடவடிக்கை

யாழ்ப்பாணம் இளவாலையில் தனது 6 வயது பெண் பிள்ளைக்கு உணவில் கிருமிநாசினியை கலந்து ஊட்டிய தந்தை தலைமறைவாகியுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண் குழந்தை தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் யாழ்ப்பாணம், இளவாலை பொலிஸ் பிரிவிலுள்ள உயரப்புலம் பகுதியில் நடந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், 6 வயதான பிள்ளை உணவு உட்கொண்ட பின் வாயிலிருந்து நுரை வெளியேறியது.




குடும்பத்தினர் பிள்ளையை உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். இதன்போது உணவில் கிருமிநாசினி கலந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து பிள்ளையின் தந்தை உணவில் கிருமிநாசினியைக் கலந்து ஊட்டியமையாலேயே பிள்ளை பாதிக்கப்பட்டது தெரியவந்தது.

பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்த நிலையில் உணவூட்டிய தந்தை வீட்டை விட்டு தலைமறைவாகி விட்டார்.

அவரைக் கைது செய்ய இளவாலைப் பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.





# துள்ளுக்குடியிருப்பு மக்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கல்

(வாஸ் கூஞ்ஞ)

‘ஈகில் ஐ இன்டர்நெஷனல்’ நிறுவனத்தின் அனுசரணையுடன் மன்னார் துள்ளுக்குடியிருப்பு கிராம பகுதியில் 39 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இலவசமாக கண் பரிசோதனை செய்யப்பட்டு அவர்களுக்கு இலவசமாக மூக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டன. ஐநூறுக்கு மேற்பட்டோர் இதனால் நன்மை பெற்றுள்ளனர்.



மன்னார் துள்ளுக்குடியிருப்பு பகுதியில் இலவசமாக கண் பரிசோதனை செய்யப்பட்டு அவர்களுக்கு இலவச மூக்கு கண்ணாடிகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளை இப்பகுதி சமூக சேவையாளர் ஸ்ரீபன் செந்தி தம்பதினர் மேற்கொண்டிருந்தனர்.

இந்தப் பரிசோதனையில் துள்ளுக்குடியிருப்பிலிருந்து கட்டுக்காரன் குடியிருப்பு வரையுள்ள கிராம மக்களுக்களும் மற்றும் பேசாலை பகுதி மக்களும் கலந்து கொண்டனர்.




### சக பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவரை

# வெளிநாடு அனுப்புவதாகப் பணம் பெற்று ஏமாற்றிய சந்தேகத்தில் ஒருவர் கைதானார்

யாழ்ப்பாணத்தில் சக பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவரை வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகத் தெரிவித்து பெருந் தொகையான பணத்தைப் பெற்று மோசடி செய்த பொலிஸ் உத்தியோகஸ்தர் நீதி மன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் கடந்த 2022 ஆம் ஆண்டு, சக பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவரை வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாக கூறி 14 லட்சத்து 70 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்றுள்ளார்.

இந்த நிலையில் மூன்று வருட காலமாகியும் வெளிநாட்டுக்குத் தன்னை அனுப்பி வைக்காமை குறித்து அவர் தன்னை மோசடி செய்துள்ளார் என்று பாதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகஸ்தர் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனை அடுத்து, விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், மோசடியில் ஈடுபட்ட குற்றத்தில் பணத்தைப் பெற்ற பொலிஸ் உத்தியோகஸ்தரை கைது செய்து மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய வேளை, அவரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.






# வவுனியா 'நெற்போல் பிரிமியர் லீக்' சம்பியனானது பாஸ்ப்ரோடக்ஸ்

**(கி.வசந்தன்)**

வவுனியா 'நெற்போல் பிரீமியர் லீக்' இறுதிப் போட்டியில் பாஸ் ப்ரோடக்ஸ் அணி வெற்றிபெற்றது.

வவுனியா மாவட்ட வலைப்பந் தாட்ட சங்கம் நடத்திய வவுனியா 'நெற் போல் பிரீமியர் லீக்' சுற்றுத் தொட ரில், பவர்பாசர்ஸ், டினாமிக்7, வுளொக் கிங் றொக்கெற்ஸ், பிவோட் பாட்டி, பாஸ் ப்ரோடக்ஸ் ஆகிய அணிகள் பங்குபற்றின.

இதன் இறுதிப் போட்டி நேற்று (12) வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்த இறுதிப் போட்டியில் பிவோட் பார்ட்டி அணியை எதிர்த்து பாஸ் ப்ரோடக்ஸ் அணி மோதியது. இதில் 42:37 என்ற புள்ளிகள் அடிப்படையில் பாஸ் ப்ரோடக்ஸ் அணி வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தின ராக இலங்கையின் தேசிய வலைப்பந் தாட்ட வீரர் திலினி டினெசிக்க கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பதக்கங்களையும் கிண் ணங்களையும் வழங்கினார்.

























# வல்வெட்டித்துறையில் இந்திரவிழா!

வல்வெட்டித்துறை மக்களால் நேற்று இந்திர விழா மிகவும் பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வல்வெட்டித்துறை ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய வருடாந்திர மகோற்சவ தீர்த்த திருவிழா சித்திரா பௌர்ணமி தினமான நேற்று இடம்பெற்றது.

இதனை முன்னிட்டு இந்திர விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆலயத்தைச் சூழவுள்ள சுமார் 3 கிலோ மீற்றர் தூர வீதி மின் விளக்கு சேடனைகள், இந்து தெய்வங்களின் உருவங்கள் மின் ஒளி அலங்கரிக்கப்பட்டு பிரமாண்டமாக இருந்தன.

அத்துடன் பத்துக்கும் மேற்பட்ட மேடைகள் அமைக்கப்பட்டு இசை நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.









# தெல்லிப்பழை சுகாதார வைத்தியர் பிரிவில் உணவகங்களில் திடீர பரிசோதனைகள்

## தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி நந்தகுமார் தெரிவிப்பு

(நடராஜன் ஹரன் )

யாழ். தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட உணவகங்கள் எதிர்வரும் காலங்களில் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளன.

புதிதாக உணவகங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு மருத்துவ விழிப்புணர்வு மருத்துவ சான்று அளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு விளக்கமளிக்கும்போது, யாழ். தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி பரா.நந்தகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,



உணவுகளைக் கையாளும் போது நமக்கும் நுகர்வோருக்கும் மட்டுமன்றி சுற்றுப்புறச் சூழலுக்கும் தீங்கின்றிச் செயல்பட வேண்டும். உணவகங்களில் கடமை புரியும் ஊழியர்கள் கட்டாயம் மருத்துவ சான்றிதழ் பெற்றுக் கொள்ள வேண்டும்.

உணவு கையாளும் நிறுவனங்களில் ஏற்படும் சுகாதாரச் சீர்கேடுகள் தொடர்பில் உடனடியாகப் பொது மக்கள் முறைப்பாடுகளைத் தெரிவிக்க வேண்டும். இதன் மூலம் உணவகங்களில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு உரிய தீர்வுகளை பெற்றுக் கொள்ள முடியும்.

எதிர்வரும் நாள்களில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் திடீர் கள விஜத்தில் கலந்து கொண்டு பரிசோதனை மேற்கொள்ளவுள்ளனர். மீறும் உரிமையாளர்களுக்கு எதிராக உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.– என்றார்.



# சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத 8 தானசலைகளை இடைநிறுத்த நடவடிக்கை

வெசாக் பண்டிகைக் காலத்தில் முறையான சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றாத 8 தானசாலைகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொது சுகாதார ஆய்வாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்தோடு, முறையான அறிவுறுத்தல்களுக்குப் பிறகு மேலும் 17 தானசாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது என்றும் அதன் செயலாளர் சமில் முத்துகுட தெரிவித்தார்.

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நேற்று நாடு முழுவதும் பல தானசாலைகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

அனைத்துத் தானசாலைகளும் பொது சுகாதார பரிசேதகர்களால் மேற்பார்வையிடப்பட்டன.

பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் கருத்து வெளியிடுகையில், தானசாலைகள் தொடர்பிலும் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கவுள்ளன என்றும் சுகாதாரம் பேணப்படாது விட்டால் அவற்றை மூட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.



# தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகளின் பஸ்மீது இனந்தெரியாதோர் தாக்குதல்!




தென்னிலங்கை சுற்றுலா பயணிகளின் பஸ் ஒன்றின் மீது நேற்று திங்கட்கிழமை இரவு மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் தாக்குதலை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலணைப் பகுதியில் இருந்து யாழ்ப்பாண நகர் நோக்கி வந்த பஸ், மோட்டார் சைக்கிளில் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டபோது, இடம் தரவில்லை என்றும் மோட்டார் சைக்கிளில் வந்த மூவரும் பஸ் சாரதியுடன் முரண்பட்ட நிலையில், பஸ் கண்ணாடிகளை அடித்து உடைத்து விட்டுத் தப்பி சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் பஸ்ஸில் இருந்த இருவர் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் பஸ் சாரதி யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலைக்கு மின்பிறப்பாக்கி ஒன்று வழங்கப்பட்டது!

நெடுந்தீவு பிரதேசத்துக்கான மின் விநியோகம் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்படாது மின் பிறப்பாக்கிகள் ஊடாகவே மின் சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த நிலையில் கடந்த வாரம் மின் பிறப்பாக்கி ஒன்று திடீரென பழுதடைந்தமையால், நெடுந்தீவில் மின் தடை ஏற்பட்டது.

இந்த நிலையில் கடந்த 10 ஆம் திகதி இரவு ஏற்பட்ட திடீர் மின் தடை காரணமாக நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையில் டார்ச் லைட் வெளிச்சத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்தினர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் அமைச்சர் சந்திரசேகரம் ஆகியோரது கவனத்துக்கு கொண்டு சென்றிருந்தனர்.

அந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான வைத்தியர் பவானந்தராஜா மற்றும் இளங்குமரன் ஆகியோரது முயற்சியால் நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலைக்கு மின்பிறப்பாக்கி ஒன்றுவழங்கப்பட்டது.





# நாட்டில் விபத்துகளைக் கட்டுப்படுத்த விசேட நடவடிக்கைகள் முன்னெடுப்பு

## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் தகவல்

நாடு முழுவதும் அதிகரித்துவரும் வீதி விபத்துகளைக் கட்டுப்படுத்த விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 16 நிறுவனங்கள் கூட்டாக இணைந்து வீதி விபத்துகளைத் தடுப்பதற்கான செயற்றிட்டம் ஒன்றை அடுத்த இரண்டு மாதங்களுக்குள் நடைமுறைப்படுத்தவுள்ளன.

இந்த விடயத்தை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (11) இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று, நுவரெலியா, இறம்பொடை பள்ளத்தாக்கில் விழுந்து சுமார் 22 பயணிகள் உயிரிழந்ததுடன் 35 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த நிலையில், வீதி விபத்துகளைத் தடுப்பதற்கான திட்டங்கள் குறித்து ஊடகம் ஒன்றுக்குப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துணை அமைச்சர் டாக்டர் பிரசன்ன குணசேன கருத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மூன்று மாதங்களுக்கு முன்பு தொடங்கப்பட்ட வீதி பாதுகாப்பு என்ற முயற்சியின் ஒரு பகுதியாக ஒரு செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இது வீதி தொடர்பான இறப்புகள் மற்றும் காயங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு தொடங்கப்பட்டது.

வீதி போக்குவரத்து மற்றும் பாதுகாப்பில் உள்ள அனைத்து முக்கிய பங்குதாரர்களும் இந்த திட்டத்தின் கீழ் ஒன்றிணைக்கப்படுகிறார்கள்.

இதில் வீதி பயணிகள் போக்குவரத்து ஆணையம், இலங்கை போக்குவரத்து சபை, ரயில்வே துறை, பொலிஸ், மோட்டார் போக்குவரத்துத் துறை, தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் மற்றும் பல அடங்கும்.

அவர்கள் ஒரு செயற்றிட்டத்தைத் தயாரித்துள்ளனர். அது அடுத்த இரண்டு மாதங்களுக்குள் செயல்படுத்தப்படும்.- என்றார்.

### இளைஞனைத் தாக்கிய ஆசிரியையைத் தேடி

# பொலிஸார் வலை விரிப்பு; ஆசிரியை தலைமறைவு!

இணைய வழி மூலம் புலமைப் பரிசில் வகுப்புகளை நடத்தும் ஆசிரியர் ஹயேஷிகா பெர்னாண்டோ, ஒரு இளைஞனின் அடி வயிற்றில் பல முறை உதைத்துள்ளார் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், அவரைக் கைது செய்ய மூன்று பொலிஸ் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன என்று மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சந்தேக நபர் தனது தொலைபேசியையும் நிறுத்திவிட்டு தனது மகளுடன் அந்தப் பகுதியை விட்டு தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பழிவாங்கும் விதமாகக் அந்த இளைஞன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




தாக்கப்பட்ட இளைஞனின் சகோதரி, ஆசிரியை ஹயேஷிகா குறித்து முகநூல் பக்கத்தில் பதிவிட்டமை தொடர்பில் பழிவாங்கும் விதமாக, சந்தேக நபர், அவரது கணவர் மற்றும் அவரது நிறுவனத்தின் மேலாளர் ஆகியோர் அந்த இளைஞனைத் தாக்கியுள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

அதன்படி, நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றம், ஹயேஷிகா பெர்னாண்டோவின் கணவர் மற்றும் மேலாளரை கட்டான பொலிஸார் கைது செய்து, நீதிமன்றில் முற்படுத்தியுள்ளனர். இந்த நிலையில் நாளை (14) வரை அவர்களைக் காவலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹயேஷிகா பெர்னாண்டோவை கைது செய்ய அவரது வீட்டுக்குச் சென்றபோது, அவர் தனது மகளுடன் அப்பகுதியை விட்டு தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான இளைஞன் நீர்கொழும்பு மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# முள்ளிவாய்க்காலில் நினைவு முற்றம்; விரைவில் அமைப்பதற்குத் திட்டம்!

## தமிழர் மரபுரிமை பேரவையின் இணைத் தலைவர் அருட்பணி சின்னத்துரை லியோ ஆம்ஸ்ரோங்

இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட மக்களை நினைவு கூரும் வகையில் முள்ளிவாய்க்கால் மண்ணில் நினைவு முற்றத்தை அமைக்கத் திட்டமிட்டிருக்கிறோம் என்று தமிழர் மரபுரிமை பேரவையின் இணைத் தலைவரும், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழுவின் வடக்குக் கிழக்கு பொதுக்கட்டமைப்பின் இணைத் தலைவருமான அருட்பணி சின்னத்துரை லியோ ஆம்ஸ்ரோங் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இன்றைய காலத்தில் தற்போதைய அரசும் கடந்த கால சூழ்நிலைகளை அவதானிக்கும் போது போரில் இறந்த அனைவருக்குமான ஒரு பொது நினைவுத் தூபி ஒன்றை அமைக்கத் திட்டமிடுகிறார்கள்.

அவர்கள் அமைக்க இருப்பதும் முள்ளிவாய்க்காலில் நாங்கள் நிறுவ இருக்கும் தூபியும் வித்தியாசமானவை. அவர்கள் அமைக்க இருப்பது, எங்களுடைய இன அழிப்பை இல்லாமல் போக செய்கின்ற ஒரு முயற்சியாக இருக்கிறது. நாங்கள் அமைக்க இருப்பது, நாங்கள் இனமாக அழிக்கப்பட்டோம் என்பதை உரத்துக் கூறுவதாக இருக்கிறது.

ஆகவே அவர்கள் தங்களுடைய அதிகாரத்தை பயன்படுத்தி எதைச் செய்ய முனைந்தாலும் நாங்கள் எங்களுடைய உணர்வுகளின் அடி தளத்தில் இந்த இடத்தில் நிறுவுகின்ற நினைவுத் தூபி என்பது வருடாவருடம் காலாகாலமாக நாங்கள் அழிக்கப்பட்டோம் என்பதை நினைவு கூரும்.

சிங்கள பௌத்த பேரினவாதத்தால் தமிழ் மக்களாகிய நாங்கள் வகை தொகையின்றிக் கொல்லப்பட்டோம் என்பதை உரத்து கூறும் ஒரு விடயமாகவே நாங்கள் அதனைப் பார்க்க வேண்டும். அதற்கான முயற்சிகளை நாங்கள் மேற்கொள்வோம்.

கனடாவில் பிரண்டன் நகரில் பிரண்டன் மேஜருடைய ஒத்துழைப்பில் பிரமாண்டமான நினைவுத் தூபி ஒன்று கட்டப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு அதற்கான அடிக்கல் நடப்பட்ட அந்த நிகழ்வில் நானும் கலந்து கொள்ளக் கூடிய வாய்ப்புக் கிடைத்திருந்தது. இன்றைய நாளில் அதனை நிறைவேற்றி இருக்கிறார்கள்.

அந்த இடத்திலேயே அவர்களுக்கு இருக்கும் சுதந்திரம் நிறைவேற்றக் கூடியதாக அமைந்திருக்கின்றது. எமது மண்ணிலும் அவ்வாறான ஒரு நினைவுத் தூபியை நாங்கள் அமைக்க வேண்டும்.

இந்த இடத்திலே அதற்கு உரிய பல்வேறு விடயங்களை நாங்கள் உருவாக்க வேண்டும். அதற்கு இந்த காணியை உரியவர்களிடம் இருந்து பெற்று மிக விரைவிலே இந்த ஆண்டுக்குள் இந்த இடத்தில் நினைவு கூரக்கூடிய வகையில் கொலலப்பட்டவர்களது பெயர்களையும் தாங்கி வரக்கூடிய வகையில் சில நினைவு விடயங்களை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளோம். அதற்கான காலம் நெருங்கி வருகின்றது. அதற்கு பலருடைய ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.

இந்த விடயத்தை நாங்கள் ஆரம்பிக்கும் போது அத்தனை சிவில் சமூகங்களோடும், மக்களோடும் அரசியல் சமூகங்களோடும், புலம்பெயர்ந்து வாழும் மக்களுடைய ஒத்துழைப்போடும், இங்கு வாழும் மக்களுடைய ஒத்துழைப்போடும் இந்த நினைவு முற்றத்தை நிச்சயமாக நிறுவுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம்.– என்றார்.

# யாழ்ப்பாண வெசாக் கொண்டாட்டம்; பெருந்திரளான மக்கள் பங்கேற்றனர்!



யாழ்ப்பாணத்தில் வெசாக் கொண்டாட்டம் நேற்று ஆரம்பமான நிலையில் பெருந்திரளான சிங்கள, தமிழ் மக்கள் பங்கேற்றனர். வெசாக் நிகழ்வுகள் யாழ்ப்பாணம் ஆரியகுளத்தில் அமைத்துள்ள விகாரையில் வழிபாடுகளுடன் ஆரம்பமாகி இடம்பெற்றன.

பெருமளவில் வெளிச்சக் கூடுகள் அமைக்கப்பட்டு ஒளிரவிடப்பட்டிருந்தன. வீதிகளும் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

புத்த பெருமானின் பரிநிர்வாணத்தை நினைவுகூரும் வரலாற்று கதைகள் வெளிச்ச வீடுகள் மூலம் பிர-திபலித்தன.

இதன்போது விகாரையில் தான சாலை அமைக்கப்பட்டு மக்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

அத்துடன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலும் மின் விளக்குகளால் அலங்கரிப்புகள் செய்யப்பட்டிருந்தன. அங்கும் தானசாலை அமைக்கப்பட்டு மக்களுக்கு உணவுகள் வழங்கப்பட்டன.















# கதிர்காமத்தில் ஆடிவேல் விழாவுக்கு இன்று காலை கன்னிக்கால் நடப்பட்டது!

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவத்தின் மாங்கல்ய சடங்கு கன்னிக்கால் அல்லது பந்தல் கால் நடும் நிகழ்வு இன்று (13) செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்றது.

கதிர்காம கந்தன் ஆலயத்தின் பஸ்நாயக்க நிலமே டிஷான் குணசேகர தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

முகூர்த்தத்தில் குவளை நடும் நிகழ்வு இடம்பெற்றது. நேற்று மாலை, பழங்கால முறைப்படி வெட்டப்பட்ட கம்புகள், மாணிக்க ஆற்றில் குளிப்பாட்டப்பட்டு, இரவு வள்ளி அம்பாள் திருக்கோவிலில் வைக்கப்பட்டன.

இன்று காலை சுப முகூர்த்தத்தில் ஆலயத்தில் இருந்து அம்மக்களின் துணையுடன் திரு.ராலா மற்றும் கடைக்காரர் ராலா தலைமையில் கடமையாற்றும் குழுவினர் மகா தேவாலயத்துக்குச் சென்றனர்.

கதிர்காமம் பெரிய ஆலயத்தின் கப்புறாளையர்,பெரேஹரா பொறுப்பு நிர்வாகி, ராலா தலைமையில் கடமையாற்றும் குழுவினர் ஆலயத்துக்குச் சென்று பந்தக் கால் நட்டனர்.

அதன்படி, இன்று முதல் 45 நாள்களுக்குப் பின்னர் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அசல பெரஹெரா ஆடிவேல் திருவிழா ஜூன் 26 ஆம் திகதி ஆரம்பமாகி, ஜூலை 09 ஆம் திகதி மஹா பெரஹெரா இடம்பெற்று, ஜூலை 10 ஆம் திகதி காலை மாணிக்கங்கையில் நீர் வெட்டும் சடங்குடன் அதாவது தீர்த்தத்துடன் நிறைவடையும்.

இந்தச்சடங்குகள்,தினங்கள்பௌத்த பாரம்பரிய முறைப்படி தீர்மானிக்கப்பட்டன.

சைவமுறை அல்லது இந்துக் கோயில் என்ற ரீதியில் நோக்கினால் கதிர்காம ஆடிவேல் விழா ஆடி மாதத்தில் வரவேண்டும். ஆனால் இங்கு இந்த வருட உற்சவம் ஆனி மாதத்தில் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.











# தாதியர் தினத்தை முன்னிட்டு அக்கரைப்பற்றில் மருத்துவ முகாம்

(றிஸ்வான் சாலிஹு)

சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று ஐ.என்.பீ.எஸ். கேம்ஸில் தாதியர் கற்கை நெறியை பயிலும் மூன்றாம் மற்றும் நான்காம் வருட மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இலவச மருத்துவ பரிசோதனை முகாம் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் திங்கட்கிழமை கல்லூரின் பணிப்பாளர் ஐ.ரீ.ஹனீன் தலைமையில் நடைபெற்றது.

இந்த இலவச மருத்துவ முகாமில் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களுக்கான சகல மருத்துவ பரிசோதனைகளும் இந்த மாணவர்களால் சிரேஷ்ட தாதியர் உத்தியோகத்தரின் மேற்பார்வையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் விமலதாஸ, அம்பாறை மாவட்ட சிரேஷ்ட உளநல ஆலோசகர் மனூஸ் அபூபக்கர், கல்லூரியின் நிறைவேற்று பணிப்பாளர் எம்.ஏ. சிறாஜ், சிரேஷ்ட தாதியர் உத்தியோகத்தர் எஸ்.நபறுல்லாஹ் மற்றும் உத்தியோகத்தர்கள் மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தாதியர் உத்தியோகத்தர்களை கௌரவிப்பதோடு, தாதியர் தாயான புளோரன்ஸ் நைட்டிங்கேலை நினைவு கூரும் வகையிலும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது என்று நிறுவனத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.





# தாக்குதல் தற்காலிகமாகவே நிறுத்தம்; அத்துமீறினால் பதிலடி வழங்கப்படும்

## பிரதமர் மோடி பாகிஸ்தானுக்கு எச்சரிக்கை

"அணு ஆயுத மிரட்டல் இனி செல்லாது. இராணுவ நடவடிக்கையை தற்காலிகமாகவே நிறுத்தி வைத்திருக்கிறோம். பாகிஸ்தான் அத்துமீறினால் தகுந்த பதிலடி கொடுக்கப்படும்."

- இவ்வாறு பிரதமர் மோடி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி நேற்று இரவு 8 மணி அளவில் நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தினார். அப்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த சில நாள்களில் இந்தியாவின் வலிமையை ஒட்டுமொத்த உலகமும் பார்த்து வியப்பில் ஆழ்ந்தது. இந்த நேரத்தில் முப்படைகளுக்கும் வீரவணக்கம் செலுத்துகிறேன். நமது உளவு அமைப்புகள், விஞ்ஞானிகளுக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறேன். ஒபரேஷன் சிந்தூர் மூலம் நமது லட்சியம் நிறைவேறி உள்ளது. நமது வீரர்கள் மிகப்பெரிய வெற்றியை ஈட்டி தந்துள்ளனர். இந்த வெற்றியை நாட்டின் அனைத்து தாய்மார்கள், சகோதரிகள், மகள்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.

நமது சகோதரிகள், மகள்களின் குங்குமத்தை அழிப்பவர்களுக்கு என்ன தண்டனை வழங்கப்படும் என்பது அனைத்து தீவிரவாத அமைப்புகளுக்கும் தெள்ளத் தெளிவாக இப்போது உணர்த்தப்பட்டு உள்ளது. ஒபரேஷன் சிந்தூர் என்பது வெறும் பெயர் கிடையாது. இது கோடிக்கணக்கான இந்தியர்களின் உணர்ச்சி. கடந்த 7 ஆம் திகதி அதிகாலை பாகிஸ்தானில் செயல்பட்ட தீவிரவாத முகாம்கள் துல்லிய தாக்குதல்கள் மூலம் அழிக்கப்பட்டன. இதுபோன்ற தண்டனையை அவர்கள் கனவிலும் நினைத்து பார்த்திருக்க மாட்டார்கள்.

நீண்டகாலமாக பாகிஸ்தானின் பாவல்பூரும் முர்டேவும் சர்வ தேச தீவிரவாதத்தின் பல்கலைக்கழகங்களாக திகழ்ந்தன. அமெரிக்காவின் இரட்டை கோபுர தாக்குதல், லண்டன் சுரங்கப் பாதை ரயில்கள் மீதான தாக்குதல், பஹல்காம் தாக்குதல் உட்பட இந்தியாவில் நடத்



தப்பட்ட தாக்குதல்களுக்கான சதித் திட்டங்கள் அனைத்தும் பாவல்பூர், முர்டேவில் உள்ள தீவிரவாத முகாம்களில் தீட்டப்பட்டன.


எனவே அங்கு செயல்பட்ட தீவிரவாத அமைப்புகளின் தலைமை அலுவலகங்களை அழித்து தரைமட்டமாக்கி உள்ளோம். இதில் 100 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டு உள்ளனர். இந்திய எல்லைகளில் உள்ள குருத்வாராக்கள், கோயில்கள், கல்வி நிறுவனங்கள், வீடுகள் மீது பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல் நடத்தியது. இந்திய இராணுவ தளங்களை குறிவைத்தும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

பாகிஸ்தான் இராணுவம் பெரும் எண்ணிக்கையில் ட்ரோன்கள், ஏவுகணைகளை ஏவியது. அவை அனைத்தும் நடுவானில் சுட்டு வீழ்த்தப்பட்டன. இந்திய இராணுவத்தின் வலிமையைப் பார்த்து ஒட்டுமொத்த உலகமும் வியப்பில் ஆழ்ந்திருக்கிறது. பாகிஸ்தான் இராணுவத்தால் இந்தியாவின் எல்லைப் பகுதிகளை மட்டுமே தாக்க முடிந்தது. ஆனால் இந்திய இராணுவம் பாகிஸ்தானின் இதயத்தின் மீதே தாக்குதல் நடத்தியது. இந்திய ஏவுகணைகள், ட்ரோன்கள் பாகிஸ்தான் விமானப் படைத் தளங்களை மிகத் துல்லியமாக தாக்கின. கனவிலும் நினைத்து பார்க்க முடியாத அளவுக்கு பாகிஸ்தான் விமானப்படைத் தளங்கள் சேதமடைந்திருக்கிறது.

இந்தியாவின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் பாகிஸ்தான் திணறியது. பதற்றத்தை தணிக்க வேண்டும் என்று ஒட்டுமொத்த உலக நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுத்தது. நிர்பந்தத்தின் காரணமாக கடந்த மே 10 ஆம் திகதி பாகிஸ்தான் இராணுவ டி.ஜி.எம்.ஓ. இந்திய இராணுவ டி.ஜி.எம்.ஓ-ஐ தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். இனி மேல் தீவிரவாத அமைப்புகளுக்கு ஆதரவு அளிக்க மாட்டோம். இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள மாட்டோம் என்று பாகிஸ்தான் டி.ஜி. எம்.ஓ. உறுதி அளித்தார். இதன்பிறகே சண்டை நிறுத்தம் அமலுக்கு வந்தது.

இராணுவ நடவடிக்கையை நாங்கள் தற்காலிகமாக மட்டுமே நிறுத்தி வைத்திருக்கிறோம் அல்லது ஒத்தி வைத்திருக்கிறோம். பாகிஸ்தான் அத்துமீறினால் தகுந்த பதிலடி கொடுக்கப்படும்.தீவிரவாதிகளின் இறுதிச் சடங்கில் பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் பங்கேற்று உள்ளனர். தீவிரவாதத்துக்கு பாகிஸ்தான் அரசு ஆதரவு அளிக்கிறது என்பதற்கு இதைவிட சிறந்த உதாரணம் வேறு எதுவும் கிடையாது. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள் எதிரிகளை துவம்சம் செய்தன. எங்களது அதிநவீன ஆயுதங்களை பார்த்து உலகம் வியப்பில் ஆழ்ந்திருக்கிறது.

உலக நாடுகளுக்கு தெளிவாக ஒன்றை கூறி கொள்ள விரும்புகிறேன். தீவிரவாதம், ஆக்கிரமிப்பு காஷ்மீர் குறித்து மட்டுமே பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும். வேறு எந்த விஷயம் குறித்தும் அந்த நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படாது. தண்ணீரும் ரத்தமும் ஒரே நேரத்தில் பாயாது. வர்த்தகமும் தீவிரவாதமும் ஒருசேர பயணிக்க முடியாது. அணு ஆயுத பூச்சாண்டிக்கு அஞ்ச மாட்டோம். தீவிரவாத தாக்குதலுக்கு எங்களது பாணியில் தகுந்த பாடம் கற்பிப்போம். இது புத்தர் பிறந்த பூமி. நாங்கள் அமைதியை விரும்புகிறோம். வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க விரும்புகிறோம். உலகத்தின் நன்மையை மட்டுமே விரும்புகிறோம். இறுதியாக இந்தியர்களின் வீரம், ஒற்றுமைக்கு மீண்டும் ஒருமுறை வீரவணக்கம் செலுத்துகிறேன்." என்று தெரிவித்துள்ளார்.



# இந்திய இராணுவத்தை தலைவணங்குகிறேன்

## நடிகர் கமல்ஹாசன் தெரிவிப்பு

துணிச்சலோடும், உறுதியோடும், கடமை உணர்வோடும் பணியாற்றிய இந்திய இராணுவத்துக்கு தலைவணங்குகிறேன் என்று நடிகர் கமல்ஹாசன் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக நடிகர் கமல்ஹாசன் சமூகவலைத்தளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில்,

"துப்பாக்கி சத்தம் மவுனமாகி அமைதி நிலவும் சூழலில், நாட்டு மக்களின் அமைதிக்காக தங்கள் இன்னுயிரை தந்தவர்களை கவுரவிக்கும் தருணம். இது. ஆபத்து நிறைந்த சூழலில் துணிச்சலோடும், கடமை உணர்வோடும், உறுதியோடும் பணியாற்றிய இந்திய இராணுவத்துக்கு தலைவணங்குகிறேன்.

நீங்கள்தான் இந்தியாவின் கௌரவம். இந்திய மக்கள் குறிப்பாக, ஜம்மு -காஷ்மீர், பஞ்சாப், அரியானா, ராஜஸ்தான், குஜராத் மக்களின் எதிர்ப்புணர்வு அசாதாரணமானது. நீங்கள் உயர்ந்து நிற்கின்றீர்கள். உங் களால் இந்திய நாடு பெருமை அடைகிறது.

சோதனை மிகுந்த இந்த காலகட்டத்தில் மாநிலங்களில் மொழிகளை கடந்து, சித்தாந்தங்களைகடந்து இந்தியாவின் ஒற்றுமை உணர்வையும், எழுச்சி உணர்வையும் கண்டோம்.

பயங்கரவாதத்துக்கு முன் இந்தியா ஒருபோதும் மண்டியிடாது என்ற உறுதியான செய்தியை தனது உறுதியான நடவடிக்கையால் உலகிற்கு எடுத்துச்சொன்ன இந்திய அரசை பாராட்டுகிறேன். நாம் அடைந்துள்ள வெற்றி நம்மை விழிப்போடு இருக்கச் செய்ய வேண்டும்.

இது வெற்றியை கொண்டாடும் நேரம் அல்ல. மாறாக வலிமையான இந்தியாவை மேலும் வலுப்படுத்தவும், மறுகட்டமைப்பு செய்யவும், உகந்த தருணம் ஆகும்." என்று குறிப்பிட்டுள்ளார்.



# குடியேற்றவாசிகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த பிரித்தானிய நடவடிக்கை

பிரித்தானியா, உத்தேச குடியேற்ற முறைமையைக் கடுமையாகக் கடைப்பிடிப்பதன் மூலம் குடியேற்ற வாசிகளின் எண்ணிக்கையினை கணிசமாகக் கட்டுப்படுத்த முடியும் என பிரதமர் கெயர் ஸ்ராமர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

முன்மொழியப்பட்ட மாற்றங்களில், அனைத்து நுழைவு அனுமதி விண்ணப்பிப்போர் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் ஆங்கில அறிவு பரிசோதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 5 முதல் 10 ஆண்டுகள் வரை விண்ணப்பங்களைப் பரிசோதிப்பதற்கான காலவரையறை நீடிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், வெளிநாட்டு பராமரிப்புப் பணியாளர்களின் ஆட்சேர்ப்பை மட்டுப்படுத்தவும் பிரதமர் விரும்புவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் செயல்பாடுகள், சட்டபூர்வமாக பிரித்தானியாவிற்குள் நுழைபவர்களைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

அதேவேளை, புகலிட அமைப்பு மற்றும் எல்லைப் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் மேலும் மாற்றங்களை வகுக்கும் என உள்துறை செயலாளர் யெவெட் கூப்பர் தெரிவித்துள்ளார்.





# துருக்கியுடனான தாக்குதலை இடைநிறுத்தியது குர்திஷ்

கடந்த நான்கு தசாப்த காலமாக துருக்கியுடன் மோதலில் ஈடுபட்டிருந்த குர்திஷ் போராளிக்குழுவினர் தமது தாக்குதல் நடவடிக்கைகளை இடைநிறுத்துவதாக அறிவித்துள்ளனர்.

தமது ஆயுத குழுவினரை கலைப்பதன் மூலம் நீண்ட கால மோதலை முடிவிற்கு கொண்டு வந்துள்ளதாக குர்திஷ் தொழிலாளர் கட்சியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதனை துருக்கி தலைவர்களும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

சுதந்திர குர்திஷ் தனிநாடொன்றை ஸ்தாபிக்கும் நோக்கில் கடந்த 1984 ஆம் ஆண்டில் போராளிகள் பல்வேறு தாக்குதல்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்தனர்.

கடந்த 40 வருடங்களாக இடம்பெற்று வந்த மோதல்களில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உயிர்கள் காவு கொள்ளப்பட்டன.



இது தவிர, பொருளாதார சுமை ஏற்பட்டதுடன் சமூகங்களுக்கு இடையே பாரிய பதற்ற நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில், குர்திஷ் விவகாரத்தை கைவிடாமல் அதனை ஜனநாயக ரீதியில் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற இலக்குடன், ஆயுதக் குழுவை கலைப்பதாக குர்திஷ் தொழிலாளர் கட்சி அறிவித்துள்ளது.

கடந்த வாரம் நடைபெற்ற கட்சியின் 12ஆவது காங்கிரஸ் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கனடா முரசு
செவ்வாய்க்கிழமை 13/05/2025

## ஒன்டாரியோவில் இந்த வருடம் நுளம்புப் பரவல் அதிகரிக்கும்

ஒன்டாரியோ மாகாணத்தில் வெப்பமான காலநிலை காரணமாக, இந்த ஆண்டு நுளம்பு பரவல் மிகவும் தீவிரமாக இருக்கலாம் என கிருமிநாசினி நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். 02



# கனடாவில் தமிழ் இனப்படுகொலை கல்வி வாரத்தில் இனப்படுகொலை குறித்து போதிப்பதற்கு சந்தர்ப்பம்

### விஜய் தணிகாசலம் கருத்து

தமிழ் இனப்படுகொலை கல்வி வாரம் தொடரும் தமிழ் இனப்படுகொலை குறித்து சிந்திப்பதற்கும், அது பற்றி பொதுமக்களிற்கு போதிப்பதற்குமான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது என ஒன்ராறியோவின் சுகாதார அமைச்சின் உளநலத்துறை இணை அமைச்சரும், ஸ்காபரோ றூஜ் பார்க் தொகுதிக்கான மாநில சட்டமன்ற உறுப்பினருமான விஜய் தணிகாசலம் தெரிவித்துள்ளார்.

தமிழ் இனப்படுகொலை கல்வி வாரம் குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அந்த பதிவில் மேலும் குறிப்பிடுகையில், 03

# கனடாவில் தொடர் பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் தொடர்பாக சந்தேகநபர் கைது




கனடாவில் மிசிசாகா நகரில் கடந்த 2024 ஒக்டோபர் முதல் 2025 ஏப்ரல் மாதம் வரை இடம்பெற்ற பல பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் தொடர்பாக, பீல் பிராந்திய பொலிஸார் சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

2024 ஒக்டோபர் 6 ஆம் திகதி இரவு 9 மணியளவில், மொனிக்கா டிரைவ் பகுதியில் 30 வயது பெண்ணை சைக்கிளில் வந்த ஆண் பாலியல் வன் கொடுமை செய்துள்ளார் என கூறப்படுகிறது.

2025 மார்ச் 24ஆம் திகதி அதிகாலை 5 மணியளவில், ரெட்ஸ்டோன் ரோடு மற்றும் ஹோம் சைட் கார்டன்ஸ் பகுதியில் மேலும் ஒரு 30 வயதுப் பெண்ணை ஒருவர் தொடர்ந்துவந்து அவரை துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

2025 ஏப்ரல் 2ஆம் திகதி அதிகாலை 5.30 மணியளவில், ரெட் 03




# தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபி நீதிக்கான யணத்தின் உறுதியான அடையாளம்

## *கனடிய தமிழர் பேரவை தெரிவிப்பு*

தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபி, நீதிக்கும் உண்மைக்கும் தமிழர்கள் மேற்கொள்ளும் தொடர்ச்சியான பயணத்தின் உறுதியான அடையாளமாக அமைந்துள்ளது என கனடிய தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு கனடிய தமிழர் பேரவை இதனைத் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

"பிரம்ப்டனில் தமிழர் இனப்படுகொலை நினைவுச்சின்னம் திறக்கப்பட்ட வரலாற்று நிகழ்வு இடம் பெற்றிருந்தது.

இலங்கையின் யுத்தத்தில் உயிரிழந்த பல்லாயிரக்கணக்கான தமிழீழ மக்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள இந்த நிலைவாலயத்தை கனடிய தமிழர் பேரவை ஆதரிக்கின்றது.

உலகம் முழுவதும் தமிழர்களுக்கான நினைவேந்தலின் மாதமாக அமைந்துள்ள மே மாதத்தை முன்னிட்டு இந்த நினைவுச்சின்னம் நீதிக்கும், உண்மைக்கும், தமிழர்கள் மேற்கொள்ளும் தொடர்ச்சியான பயணத்தின் உறுதியான அடையாளமாக அமைந்துள்ளது.

இந்த வரலாற்றுச் சம்பவத்தை சாத்தியமாக்கிய பிரம்ப்டன் நகர சபைக்கும், மேயர் பாட்ரிக் ப்ரவுன் அவர்களுக்கும், அனைத்து ஏற்பாட்டாளர்கள் மற்றும் நன்கொடைதாரர்களுக்கும் கனடிய தமிழர் பேரவை மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது." என தெரிவித்துள்ளது.

## ஒன்டாரியோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த சில வாரங்களில் ஏற்பட்ட வானிலை மாற்றம் எதிர்பார்க்கப்படும் சூழ்நிலைகள், நுளம்புகளின் இனப்பெருக்கத்திற்கு ஏற்ற சூழலை உருவாக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் ஏற்பட்ட இடியுடன் கூடிய மழையும் நிலத்தில் ஈரத்தன்மையை அதிகரித்துள்ளன.

இதனுடன், இரவும் பகலும் அதிக வெப்பமுடையதாக இருப்பது, நுளம்புகளின் இனப்பெருக்கத்திற்கு சிறந்த சூழலை உருவாக்குகிறது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.



டொரண்டோ பொது சுகாதார சேவைகள் நுளம்புகளை கட்டுப்படுத்த சில நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொதுமக்கள் கடுமையான நுளம்பு கடி தாக்கத்திலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள, கீழ்காணும் வழிமுறைகளை பின்பற்ற பரிந்துரை செய்யப்படுகிறது.

ஒளிரும் நிறத்திலான ஆடைகளை அணியுமாறும், ஹெல்த் கனடா அங்கீகரித்த பூச்சிக்கொல்லி பயன்படுத்துமாறும், சூரிய உதயம் மற்றும் அஸ்தமன நேரங்களில் கூடுதல் முன்னெச்சரிக்கை எடுக்குமாறும், ஜன்னல்களிலும் கதவுகளிலும் உள்ள வலைப்பின்னல்களை சரிபார்க்குமாறும் கோரப்பட்டுள்ளது.




# கனடாவில் அதிகரிக்க இருக்கும் உணவுப்பொருள்களின் விலைகள்

கனடாவில் அத்தியாவசிய உணவுப்பொருள்களின் விலைகள் ஏற்கனவே அதிகமாக உள்ள நிலையில், அவை மேலும் அதிகரிக்கலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

கனடாவில், மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பால், வெண்ணெய் மற்றும் மாட்டிறைச்சி போன்ற உணவுப்பொருகளின் விலைகள் தொடர்ந்து அதிகரித்துவருகின்றன.

பால், இரண்டு லிற்றர் கார்ட்டன் விலை 5.35 டொலர்களாகவும், வெண்ணெய் 454 கிராம் பேக்கின் விலை 5.64 டொலர்களாகவும் உள்ளது.

இந்நிலையில்,உணவுப்பொருட்கள் விலை மேலும் 3 முதல் 5 சதவிகிதம் வரை அதிகரிக்கக்கூடும் என 2025ஆம் ஆண்டுக்கான கனடா உணவு விலை அறிக்கை தெரிவிக்கிறது.

அதாவது, ஒரு சராசரி கனேடியக் குடும்பத்தின் மளிகைப்பொருட்களுக்கான செலவு, இந்த ஆண்டில் சுமார் 800 டொலர்கள் வரை எட்ட உள்ளது.

இந்த விலை உயர்வால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது, குறைந்த வருவாய் கொண்ட குடும்பங்கள்தான். ஏற்கனவே பல குடும்பங்கள் உணவு வங்கிகளை நாடிவருகின்றன.

ஆரோக்கியம் எல்லாம் பார்க்காமல், குறைந்த விலையில் உணவுப்பொருட்கள் கிடைக்குமா என அந்தக் குடும்பங்கள் தேடத் துவங்கியுள்ளன.

கனேடிய மக்களின் இந்த நிலைக்கு ட்ரம்பின் முரட்டுத்தனமான வர்த்தக அணுகுமுறையும் ஒரு காரணம்.

ஆக, உணவுப்பொருள்கள் விலை ஒழுங்குபடுத்துதல் தொடர்பில் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் வரை, கனேடிய மக்கள் அதன் பலனை அனுபவிக்க இருக்கிறார்கள் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை.

## கனடாவில் தொடர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்டோன் மற்றும் நெதர்வுட் சாலைகளின் சந்திப் பில், மேற்படி சந்தேகநபர் ஒரு இளம் பெண்ணை கறுப்பு காரில் இழுத்துச் செல்ல முயன்றுள்ளார் என தெரிவிக் கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஏப்ரல் 4 ஆம் திகதி, மிசிசாகாவை சேர்ந்த 26 வயதான ரிக் ஜூனியர் ஆர்சன் என்ற நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர்மீது 2 தடவைகள் பாலியல் வன்கொடுமை, மரணம் அல்லது உடல் காயம் ஏற்படுத்துவதாக மிரட் டல் விடுத்தல், கடத்தல் மற்றும் தாக்குதல் ஆகிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

பொலிஸாரின் தகவலின்படி, 2023 ஏப்ரலில் ஒன்டாரியோவில் உள்ள டிமின்ஸில் இடம்பெற்ற இத்தகைய சம்பவங்களுக்காக ஆர்சன் மீது ஏற்கனவே வழக்குகள் பதியப்பட்டுள்ளன.

அந்த வழக்குகளில் அவர் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது தண்டனை விதிக்கப்படும் நிலைமையில் உள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"மே12 தொடக்கம் மே18 வரையான இந்த வாரம் தமிழ் இனப்படுகொலை கல்வி வாரம் ஆகும். நான்கு வருடங்களிற்கு முன்னர் ஒன்ராறியோவில் தமிழ் இனப்படுகொலை கல்வி வார சட்டம் நிறைவேற்றப்பட்டது.

இந்த வாரம் முழுவதும் தமிழ் சமூகத்தினரும் இளைஞர்களும் தமிழ் இனப்படுகொலையில் உயிர்பிழைத் தவர்களின் கதைகளை பகிர்ந்துகொள்வார்கள். மேலும் தமிழ் மக்கள் தொடர்ந்தும் அனுபவிக்கும் தலைமுறைகளிற்கு இடையிலான மன உளைச்சல் குறித்து அறிந்துகொள்வார்கள்.

இனப்படுகொலை என்பது ஒரு நிகழ்வால் குறிக்கப்படவில்லை. அது ஒரு செயல்முறை, ஒரு குழுவினரான மக்களை, ஒழித்து அழிக்க அரசு தொடர்ந்து செய்யும், தொடர்ச்சியான நடவடிக்கைகளின் வடிவம். 2009ம் ஆண்டு மே மாதம் தமிழர் இனப்படுகொலையின் உச்சமாக குறிக்கப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களிற்கு உணவும் மருந்தும் மறுக்கப்பட்டமை, பாலியல் வன்முறைகள் கொலைகள், கடத்தல்கள் கொத்துக்குண்டுகள் குறித்த தெளிவான நினைவுகளுடன் நாங்கள் விடப்பட்டுள்ளோம்.

முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களிற்கு உணவும் மருந்தும் மறுக்கப்பட்டமை, பாலியல் வன்முறைகள் கொலைகள், கடத்தல்கள் கொத்துக்குண்டுகள் குறித்த தெளிவான நினைவுகளுடன் நாங்கள் விடப்பட்டுள்ளோம்.

தமிழ் மக்களிற்கு எதிரான இனப்படுகொலை இன்னமும் தொடகின்றது,167,796 பேருக்கு என்ன நடந்தது என்பது தெரியாத நிலை தொடர்கின்றது.

தமிழ் இனப்படுகொலை கல்வி வாரத்தை அங்கீகரிப்பதன் மூலம் நீடிக்கும் தமிழ் இனப்படுகொலை குறித்து சிந்திப்பதற்கும், அது பற்றி பொதுமக்களிற்கு போதிப்பதற்குமான சந்தர்ப்பத்தை வழங்கும்." என்று குறிப்பிட்டுள்ளார்.